**In the Court of the District Munsif, Devakottai**

**O.S. No. 14 / 2015**

**---**

Deposition of plaintiff/defendant witness (PW1/DW) solemnly affirmed and sworn by Thiru. Rajendran, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of this act 1872 on : 07.04.2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காளியம்மாள் | Husband's Name | : | கருப்பையா |
| Taluk | : | தேவகோட்டை | Village | : | தென்னீர்வயல் |
| Religion | : | இந்து | Age | : | 70 |
| Caste | : | | | | |

**3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி :**

சாமியய்யாவிற்கு யார் யார் வாரிசு என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் படிப்பறிவு இல்லாததால் தெரியாது. என் வழக்கறிஞருக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது மகன்கள் விபரம் கூறினார்கள். SLR வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு எந்த சர்வே எண்ணில் என் மாமனார் சாமியய்யா பெயரில் பதிவு ஏற்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி தாவாச் சொத்திற்கு ஆனந்தாயி பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதி நாச்சியப்பன் என்பவர் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் ஆனந்தாயி மகன்களிடமிருந்து கிரையம் வாங்கினார், மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு நகல்கள் என் மகன்கள் தனபாலன் மற்றும் சண்முகம் எடுத்திருப்பார்கள். 3ம் பிரதிவாதி நாச்சியப்பனிடமிருந்து 4ம் பிரதிவாதி இளங்கோ எப்போது கிரையம் வாங்கினார் என்றால் இன்றிலிருந்து சுமார் 9 வருடங்கள் இருக்கும். மேற்படியார் கிரையம் பெற்றவுடன் நான் வழக்குத் தாக்கல் செய்தேன். இளங்கோ வாங்கிய கிரையம் சம்மந்தமாக எனது மகன் யாதொரு பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எனக்கோ, எனது மாமனார் சாமியய்யாவிற்கோ எந்த வகையிலும் பாத்தியமும், அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து முறைப்படி ஆனந்தாயி என்பவருக்குப் பாத்தியப்பட்டு மேற்படியார் காலமான பின்பு அவரது வாரிசுகளிடமிருந்து 3ம் பிரதிவாதி 15.04.1993ல் முறைப்படி கிரையம் பெற்று மேற்படியாரிடமிருந்து 4ம் பிரதிவாதி 25.09.2014ல் கிரையம் பெற்று 4ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி கல்லுகால்,

A DHARANIDHARAN Deposition Digitally signed by A DHARANIDHARAN Location: Devakottai Date: 2022.04.07 18:09:14 +0530

முள்ளுக்கம்பி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை சுற்றி 4ம் பிரதிவாதி கல்லுகால், முள்ளுகம்பி வேலி போட்டு அடைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஆணையர் பார்வையிட வந்தபோது, சாட்சியம் உற்பத்தி செய்யும் நோக்கத்தில் சொரூப மாற்றம் செய்தோம் என்றாலும், தாவா சொத்து எந்த காலத்திலும் எங்களுக்கு பாத்தியமில்லை என்றாலும் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு கஷ்டம் கொடுக்கும் நோக்கத்தோடு தாவா வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: Devakottai
Date: 2022.04.07 18:09:19 +0530